RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22232

OPEN ACCESS

# கலந்தொடா மகளிர் புனிற்று மகளிருக்குமான புனிதமும் விலக்கும்

இரா. இராதிகா [அ, *], க. மைதிலி [அ]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Sanctity and Exclusion of Sanctified Women and Exempted Women

R. Radhika [a, *], G. Mythili

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: radhikatharun89@gmail.com

Received: 04-03-2021
Revised: 17-05-2022
Accepted: 20-05-2022
Published: 11-06-2022

## ABSTRACT

The people of the Sangam period, who lived within a multi-professional social structure such as hunting, agriculture, and war, developed some spells and rituals whenever they had disruptions in those occupations. It is the function of anticipating material needs through nature. The mantras and rituals of ancient society are mostly based on prosperity. In that aspect, the woman who is the core nucleus of human opulence is seen as a symbol of prosperity in various events. The woman is entitled to high respect in the stages of puberty, marriage, and maternity. Especially for the sake of puberty and maternity, the woman is sanctified and forbidden. This article sets out to illustrate how mantra is transformed into religion when the consecrated woman is elevated to the status of a deity.

**Keywords:** Puberty, Marriage, Sanctified Women, Ritual, Exempted Women

## முன்னுரை

ஒவ்வொரு சொல்லும் பொருளை மட்டும் குறிப்பதோடு அதற்கான வாழ்வியல் சூழல்களையும் விளக்குகின்றது. அதுபோல கலந்தொடா மகளிர், புனிற்று மகளிர் என்பதும் பெண்களுக்கான வாழ்வியல் முறைகளை எடுத்துரைக்கின்றன. பூப்பு மற்றும் மகப்பேற்றின் பொழுது கையாளப்படும் மந்திரங்களும் சடங்குகளும் பெண்கள் புனிதபடுத்தப்பட்டதனையும் விலக்கி வைக்கப்பட்டதனையும் பதிவு செய்கின்றன. மானுட இனவிருத்திக்கு வித்தாக அமையும் பெண் உறுப்புக்கள் வளமைக் குறியீடாக மதிக்கப்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகள் பொருளியல் தேவைகளைப் பூர்த்திச் செய்துக்கொள்ள உருவாக்கப்பட்டு பிறகு அவை தொடர்ந்து புனிதமாக்கப்படும் பொழுது தெய்வம் சார்ந்த கருத்துமுதல்வாத நோக்கமுடையதாக மாறியுள்ளமையை நிரூபிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது. இவற்றின் அடிப்படையில் கலந்தொடா மகளிர் மற்றும் புனிற்று மகளிருக்குமான மந்திரங்களும் சடங்குகளும் மானுடச்செழிப்பினையும், பெண் வளமைக்கான குறியீடாக விளங்கியமையினையும் அடையாளப்படுத்துகின்றன.

அகராதிகள் கலம் என்னும் சொல்லிற்கு வீட்டு உபயோகப் பொருட்கள், அணிகலன்கள், இசைக்கருவிகள், போர்க் கருவிகள் போன்றவற்றைக் குறிக்கின்றன. நர்மதாவின் தமிழ் அகராதியானது கலம் என்பதற்கு “பாத்திரம் மரக்கலம், ஆபரணம், யாழ், ஆயுதம், ஓலைப்பத்திரம்” என்ற விளக்கத்தினைத் தருகின்றது (Maruthithasan, 2005). மேலும் பூப்பு என்பதற்கு “பூத்தல், ஒரு பெண் வயதுக்கு வருதல்” என்னும் விளக்கத்தினை வழங்குகிறது (Maruthithasan, 2005). ‘கலம்தொடா மகளிர்’ என்னும் சொற்றொடரானது பூப்படைந்த பெண்கள் வீட்டில் உள்ள மற்றும் புனிதப்பொருள்களைத் தொடாதிருந்தமையைப் புலப்படுத்துகின்றது. ‘புனிற்று’ என்ற சொல் அகராதிகளில் புனிறு என்று

கையாளப்பட்டுள்ளது. 'புனிறு' என்னும் சொல்லானது "ஈன்றணிமை, சூதகம், தோல், புதுமை" என்ற விளக்கங்களைத் தருவதாக சதுரகராதி முன்மொழிகின்றது (Veeramamunivar, 2005).

## கலந்தொடா மகளிர்

மானுடச் செழிப்பிற்குக் காரணமாக விளங்கிய பெண் மற்றும் பெண்ணின் உறுப்புகள் வளமைக் குறியீடாகின்றன. வளமைக் குறியீடுகள் புனிதமென கருதப்பட்ட நிலையில் வழிபடுபொருளாகவும் தெய்வமாகவும் வளர்நிலையை எய்துகின்றன. பூப்படைந்த பெண்ணின் கருப்பை என்னும் உறுப்பானது தாய்மை அடைவதற்கான வளர்ச்சியினைப் பெறும்பொழுது, பெண்கள் பருவமடைகின்றனர். இந்நிலையில் மூன்று அல்லது ஐந்து, ஏழு நாட்கள் பெண்களுக்கு உடலில் ஏற்படும் இரத்தப்போக்கின் வெளிப்பாடானது, அவள் இருக்கும் இடத்தினைத் தூய்மை இழக்கச் செய்யும் என்கின்ற சூழலில் அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட இடத்தினைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்தில் இருக்கச் செய்கின்றனர். இன்றைய போன்ற ஆடை பயன்பாடு இல்லா, அக்காலக்கட்டத்தில் இதுபோன்ற நடத்தை அறிவுக் கொண்டவர்களாக மக்கள் வாழ்ந்திருப்பது வியப்பில்லை. பருவம் எய்திய பெண்களின் நிலைக்குறித்து,

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின

பெதும்பை பருவத் தொதுங்கினை"

என்னும் பாடலானது விவரிக்கின்றது (Devaneya Pavanar, 2017). பேதைப் பருவத்தினளாய் இருந்தவள் பெதும்பைப் பருவத்தினை எய்து விட்டதனை எடுத்துரைத்தச் செவிலித்தாய் (நற்.351, வரி:1) அவளின் பாதுகாப்பினைக் கருதிப் பழமையான இடத்தில் அணங்கு இருக்கும். அங்குச் சென்றால் அது வருத்தும் என எச்சரித்து இற்செறிக்கின்றாள். மேலும், பூப்பெய்தியப் பெதும்பைப் பருவத்தினைக் கொண்ட அப்பெண் தழையாடை அணிந்திருப்பதனை அகம் பா.7 பதிவு செய்கின்றது. இந்நிலையில் அப்பெண் இருக்கும் இடம் தூய்மையற்று விளங்குவது இயல்பாகும். இருந்தபொழுதிலும் பூப்புற்ற பெண்; பழமையான இடத்திற்குச் சென்றால் அணங்கு வருத்தும் என்ற நம்பிக்கையினைக் கொண்டவராகப் பழஞ்சமூகத்தினர் இருந்தனரே அன்றி அப்பெண்ணை விலக்குடையவளாக நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது ஒரு பாதுகாப்பு சார்ந்த செயல்பாடாக விளங்குகிறது. களவில் ஈடுபடாமல் பெண்பிள்ளைகளைக் காக்கும் நோக்கத்துடனும் இற்செறிக்கப்பட்டிருக்க கூடும். இவ்வாறான பாதுகாப்பு சார்ந்த செய்வினைகளே தெய்வம் சார்ந்த மந்திரச்சடங்கினை வளர்தெடுக்கின்றது. மாதவிலக்குக் கொண்ட பெண்கள் சார்ந்த பழங்காலத்து நம்பிக்கையினை பிளினி "மாதவிலக்குக் கொண்ட பெண் ஒருத்தி இனிய பழந்தரும் மரத்தின் அடியில் நின்றால் அம்மரத்தின் பழத்தினுடைய இனிப்பு கொடிய கசப்பாக மாறிவிடும். அவள் தானியத்தைத் தொட்டால் அத்தானியம் விதைப்பதற்கு உதவா. அவை முளைக்கும் சக்தியை இழந்துவிடும். வளரும் பூச்செடியருகில் சென்றால் அவை சுருங்கி வாடிவதங்கி விடுகின்றன. தோட்டத்தின் பசுந்தன்மை மாறிவிடுகிறது." என்ற கருத்தினை முன்மொழிவதாக க. காந்தி தனது நூலில் குறிப்பிடுகிறார் (Gandhi, 1980). இத்தகைய அறிவினை தாவரச் செழிப்பினையும் மானுடச் செழிப்பினையும் இணைத்து நோக்கும் பழஞ்சமூகத்தின் சிந்தனையின் எச்சமாக சட்டோபாத்யாயா குறிப்பிடுகின்றார். மாதவிடாய் காலங்களில் பெண்களின் உடல்வெப்பத்தின் காரணமாக தானியங்களும் பழங்களும் கெட்டுப்போகும் என்ற எண்ணமும் இரத்தப்போக்கினால் உடல் தூய்மையிழந்தது போல அவளைச் சுற்றியிருக்கும் பொருட்களும் தூய்மையற்றதாக ஆகிவிடும் என்பது போன்ற சிந்தனையுமே இது போன்ற விலக்குகளுக்குக் காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

"அணங்குடை முருகன் கோட்டத்துக்

கலம் தொடா மகளிரின் இகந்து நின்றவ்வே"

இவ்வரிகளில் கலம் தொடா மகளிர் முருகன் கோவிலில் உள்ள கலங்களைத் தொடுதற்கு தூய்மை இல்லாத நிலை சுட்டப்படுகிறது (Devaneya Pavanar, 2017). பூப்புற்ற மகளிர் மனைகளில் கலம் தொடாது விலகி நின்று தாம் பூப்புற்றமையைத் தெரிவிப்பது தமிழர் மரபு." என கு.வெ. பாலசுப்ரமணியம் விளக்குகிறார் (Balasubramanian, 2004). தெய்வ தோற்றத்திற்கு முன்பிருந்த பழம்

போக்குகள் தூய்மைக்காகவே அன்றி இன்றுபோல் பெண்ணை இழிவுப்படுத்த அல்ல. இதனை கலந்தொட மகளிர் என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது. மேலும், தெய்வம் என்பதொரு நிலையினை வளர்த்தெடுக்கும் பொழுதுதான் இதுபோன்ற விலக்குகளும் உருபெற்றுள்ளது என்பது கருதத்தக்கதாகும். வீட்டில் உள்ள பொருள்களைத் தொடாமல் விலகியிருந்த பூப்புற்ற பெண்கள், பிறகுப் புனிதமெனக் கருதிய பொருள்களை (தெய்வங்கள்) தீண்டாமல் விலக்குடையவராகக் மாற்றப்பட்டுள்ளனர். பெண்கள் வளமைக்கானக் குறியீடாக, புனிதப் பொருளாக மதிக்கப்பட்டதற்கு மாறாக தூய்மையற்றவராகக் கருதப்படுவதனை விலக்கு நிலையிலான கலந்தொடா மகளிர் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது. பிள்ளை பெற்ற வீட்டிற்கு ஏழு நாளும், மாதவிடாய் வந்தவளுக்கு பன்னிரு நாளும், இழவு வீட்டிற்குப் பதினைந்து நாளும் தீட்டாம்.” என தேவநேயப்பாவாணர் பதிவு செய்கிறார் (Devaneya Pavanar, 2017). தீண்டுள்ள பெண்டீரை கலந்தொட மகளிர் என்று சங்ககாலத்தினர் குறிப்பிடுவதனைச் சுட்டிக்காட்டுகிறார். பரிபாடல், பெண் பூப்புற்றதைச் செவ்வணி அணிந்து தெரிவிக்கும் வழக்கம் இருந்தமையைப் புலப்படுத்துகிறது (Gandhi, 1980). தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்த செய்தியையும் மகவீன்று நெய்யாடிய செய்தியையும் தலைவனுக்கு உணர்த்துவதற்குச் செவ்வணி அணிதல் குறியீடாகக் கையாளப்படுதல் மரபாகப் பின்பற்றப்படுவதனை ஐங்.54 ஆம் பாடல் சுட்டிக்காட்டுகிறது. பூப்பெய்துதல் என்பது மகப்பேறு பெறுவதற்கான புனிதசெயல்பாடாக விளங்கினும் அதற்கு மாறாக தூய்மையற்றதாகவும் கருதும் போக்குக் காணப்படுகிறது. சமூகப் பண்பாட்டு வாழ்வில் மக்களை ஒரு நிலையிலிருந்து நகர்த்தி இன்னொரு நிலைக்கு மாற்றும் சடங்குகள் நிலைமாற்றும் சடங்குகள் ஆகும். பூப்பு, திருமணம், வளைகாப்பு, இறப்பு போன்ற வாழ்க்கை வட்டச் சடங்குகள் யாவும் நிலைமாற்றும் சடங்குகளே என்பதனை மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி கூறுகின்றார் (Baktavatchala Bharathi, 2014). பூப்புச்சடங்கானது பேதைப் பருவத்திலிருந்து பெதும்பைப் பருவத்திற்கான மாற்றத்தினை முன்வைக்கின்றது. இன்றையக் காலகட்டத்தில் ‘புனித நீராட்டு விழா’ என்பது பூப்படைந்த பெண்ணுக்குச் செய்யப்படும் சடங்காகும். பூப்புற்றதை விழாவாகச் சுற்றத்தினரை அழைத்து கொண்டாடி மகிழும் வழக்கத்தைப் பின்பற்றிய பொழுதும் மகளிருக்கான விலக்கும் காணப்படுகின்றது. நிலைமறுப்பின் நிலைமறுப்பு என்னும் பொருள்முதல்வாதக் கருத்தானது ஒரு பொருள் அதன் இருப்பு நிலையை மறுத்து இன்னொரு நிலைக்கு மாறுவதனைக் குறிப்பிடுகின்றது. மேலும் அனைத்து பொருள்களும் மாற்றத்திற்கு உட்பட்டதாகவும் கூறப்படுகின்றன. அவ்வகையில் பூப்பு மற்றும் மகப்பேறு நிகழ்வுகள் பொருள்முதல்வாதத்தின் நிலைமறுப்பு மற்றும் மாற்றம் சார்ந்த கொள்கைகளுடன் பொருந்தி நிற்கின்றன.

## புனிற்று மகளிர்

குழந்தைப் பெற்ற தீட்டுள்ள பெண்கள் புனிற்று மகளிர் எனப்படுகின்றனர். பூப்பெய்தும் பொழுது மகளிருக்கு விலக்கு வலியுறுத்தப்படுவது போன்று குழந்தைப் பெற்றபொழுதும் கூறப்படுகின்றது. குழந்தைப் பிறந்த மனையில் நெய் கலந்த ஐயவி பூசப்பெற்று முன்றிலில் வேம்பின் பைந்தழை செருகப்பெற்றும் தலைவி கிடந்த கட்டிலின் அருகில் விளக்குகள் வைக்கப்பெறும் இதனை, நெய்யாட்டுச் சடங்கு என்று கூறுகிறார் (Avvai Duraisamy, 2010).

“நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்

இலங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்”

“ஐயவி யணிந்த நெய்யாட் டீரணிப்

பசுநோய் கூர்ந்த மென்மையாக்கைச்”

என்பதிலிருந்து ஐயவி பூசப்பட்டு நீராடியதனை அறியமுடிகின்றது (Avvai Duraisamy, 2010). இக்காலத்தில் சுற்றத்தார் உடனிருப்பர் என்பதையும் முன்மொழிகின்றது. பிறந்த மகனைத் தந்தை பார்ப்பது வழக்கமாக இருந்துள்ளது. இவை, இடைக்காலத்தே புத்திரமுக தரிசனம் என மொழிபெயர்க்கப்பட்டு வழக்கில் இருந்து வந்தமை, புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் வாயிலாக

அறிகிறோம் (Avvai Duraisamy, 2010)." அழுகுரலும் அமங்கலச் சொல்லும் செவிப்படாதவாரு பெரும்பாணர் யாழும் குழலும் இசைத்தனர். ஒரு புறம் மங்கல மகளிர் மங்கல வினைகளைச் செய்தனர் (நற்.40) என்ற கருத்துக்களும் காணப்படுகின்றன. பல்வேறு இசைகளுடன் புனிற்று மகளீர் நீராடிய செய்தியினை,

"அரவாய்க் கடிப்பகை பையவிக் கடிப்பகை

புதல்வரைப் பயந்த புனிததீர் கயக்கும்"

என்ற வரிகள் முன்வைக்கின்றன. இத்தகைய புனிற்று மகளிரை தீண்டத்தகாதவராகப் பழங்குடிகள் கருதுகின்றனர். தீண்டினால் அவர்கள் இருக்கும் நிலத்தில் மழை பெய்யாது காட்டு விலங்குகள் துன்பம் தரும் என்றும் நம்புகின்றனர்." தீட்டு எனக் கருதி குழந்தைப்பெற்ற தாயை விலக்கி பின் நெய்யாட்டுச் சடங்கின் மூலமாக விலக்கு நீக்கப்படுவதாக நம்புகின்றனர். பெண் கருவுற்றக் காலத்தில் அவளுக்கு ஏற்படுகின்ற ஒரு வித வேட்கையை வயாநோய் என்று குறிப்பிடுகின்றனர். 'வயா' என்னும் சொல் 'வேட்கைப் பெருக்கம்' என்னும் பொருளினைக் குறிக்கும் என்பதனை, "வாயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்" என்ற தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது. வயா நோயுற்றப் பெண்ணிற்குப் பசிய புளியினை உண்ணக் கொடுப்பது பண்டையோர் மரபாக இருந்துள்ளமையை என்ற பாடல் பதிவு செய்கின்றது. வாயாநோயினால் புளிப்புச் சுவையின் மீது ஆசை அதிகரிக்கும் நிலையினை என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன. குறு.287 ஆம் பாடலில் பன்னிரண்டு மாதம் வரை கருவுற்றிருந்த நிலை குறிப்பிடப்படுகிறது. மேலும் பெண் கன்னியாய் இருந்து பின் முதன்முதலில் கருவுற்றிருப்பதை கடுஞ்சூல் (முதற்சூல்) என்று கூறுகின்றனர். இத்தகைய நோயுற்ற பெண்ணிற்குப் பசிய புளியினை உண்ணக் கொடுப்பது பழந்தமிழர் மரபென்பதனை குடநாட்டு வீரக்குடி மகளிர் கருக்கொண்டால் அவர்க்கு கரைத்த பசும்புளியை ஒரு வாளியின் வழியாக வாயில் வார்பதோர் சடங்காகப் பண்டுதொட்டு நடைபெற்று வருகிறது என்றும் இதுவே பசும்புனி வேட்கைக்கு ஏதுவாகும்." குடநாடு என்பது சேரநாட்டின் வடபகுதி தமிழகத்தின் வடமேற்கில் அமைந்திருந்தது என்று (அகம்.91) ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இந்நாடானது எருமை என்னும் குறுநிலத்தானுக்குக் கீழிருந்ததாகவும் (அகம்.115) பதிவு செய்கிறது. இப்பகுதியினருக்கான ஒரு சடங்காக வயாநோய்க்குப் பசும்புளிக் கொடுத்தலைப் பார்க்கமுடிகிறது. தமிழருக்கான பழக்கங்கள் பல்வேறு பகுதிகளிலும் வழங்கப்பட்டு வருவது நோக்குதற்குரியதாகும். மகப்பேற்றில் தாய் முதன்மையாக இருப்பதைப் போல தந்தைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக பிரசவத்திற்கேற்ற சுவைமாறுபட்ட உணவினை உட்கொள்வதும் உடல்வலி தனக்கும் ஏற்படுவது போன்று பாவனை செய்து கொண்டும் ஆண்கள் தனிமைப்படுத்திக் கொள்வதைப் பேறுகாலத் தனிமை என்கின்றனர். இதனை, தாய்வழிச் சமூகம் அமுக்கப்பட்டுத் தந்தைவழிச் சமூகம் கால்கொண்ட சூழலில் தந்தையின் அடையாளத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் பொருட்டும் பேறுகாலத் தனிமை ஏற்படுத்தப்பட்டது என்பார் டைலர்." இத்தகைய பழக்கத்தினை மலபார் குறவர்கள், மைசூர், சென்னை, சீரங்கப்பட்டினம், மலபார் கடற்கரை ஆகிய பகுதிகளில் வாழும் உயர்சாதியினரிடமும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. தாய்வழி சமூகத்தில் இருந்து வந்த சடங்குமுறைகளில் பெண் முதன்மைப்படுத்தபடுகிறாள். இதுவே தந்தைவழிச் சமூகத்திற்கு மாற்றப்பட்ட பொழுது ஆண்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றனர். இது போன்ற போக்குகள் பிற சடங்குகளிலும் காணப்படுகிறது. பப்புச்சடங்கும், பிறப்புச் சடங்கும் மங்களமானவையாக இருந்தாலும், தீட்டுச் சார்ந்தவையாக உள்ளன என்பதை பக்தவத்சலபாரதி முன்மொழிகின்றார். இவ்வாறு மகப்பேறுக்கான உடலமைப்பினைக் கொண்ட பெண்களையும். பெண் குறிகளையும் முதன்மைப்படுத்தி பெண்தெய்வ வழிபாடும் பெண்குறி வழிபாடும் உருவாகியுள்ளன.

## பெண் உறுப்புகளும் வளமைக்குறியீடும்

பெண் குறி, கருப்பை ஆகிய இரண்டு உறுப்புகளும் இனப்பெருக்கத்திற்குக் காரணமாக அமைவதால் புனிதப்பொருளாக மதிக்கப்பட்டு அதனை வழிபடுகின்றனர். பலுசிஸ்தான், மேற்காசியா, மெசபடோமியா, ஆசியா, சிரியா, பாலஸ்தீனம், மொகஞ்சதாரோ ஆகிய உலகின் பல பகுதிகளில்

அகழ்வாராய்ச்சியின் பொழுது இது தொடர்பான சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன என ஆ. சிவசுப்பிரமணியன் தமது நூலில் குறிபிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகில், தாராசுரம் என்னும் ஊரிலுள்ள கோவிலொன்றில் சக்ராயி| என்ற பெயருடைய பெண் தெய்வத்தை வழிபடுகின்றனர். இச்சிற்பம் ஆடையின்றி அமர்ந்த நிலையில் பெண் குறியினைக் காட்டியபடி காணப்படுகிறது. அடிவயிறானது பூரணகும்பம் போன்று அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை செழிப்பின் சின்னமாகப் பெண்குறியும், கருப்பையும் வழிபடப்படுவதைப் பதிவுச்செய்கின்றது. மானுட இனத்தை உற்பத்தி செய்வதற்கான பாலுறவுச் சடங்குகளின் எச்சமாகக் கோயில்களில் ஆடையற்ற பழைய சிற்பங்களும் அமைக்கப்பட்டிருக்கக் கூடும். பழஞ்சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் சங்க இலக்கியங்களில் அகப்பாடல்களில் பெண்களின் உடல் வர்ணனைகள் அதிகளவில் இடம்பெறுவதற்குக் காரணமாக மனித உற்பத்தியின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பெருளாகப் பெண் கருதப்பட்டிருப்பதே ஆகும். சங்ககாலத்தில் மலையும் மலைச்சார்ந்தப் பகுதியினைக் குறிக்கும் குறிஞ்சி என்னும் பெயரானது புணர்ச்சி என்ற அகப்பொருளை விளக்கும் குறியீடு என்பதனை, குறிஞ்சி என்ற குறியீடு புணர்ச்சி என்ற அகப்பொருளையும் விளக்குகிறது. குறிஞ்சி பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை பூப்பது போலப் பெண் பன்னிரண்டு ஆண்டில் பூப்பெய்தி வாழ்க்கைக்கு உரியவளாகிறாள்."12 என்ற உரைவழி அறிய முடிகிறது. பெண் பூப்படைந்து திருமண வாழ்விற்கானத் தகுதியினை அடைகிறாள் என்பது குறித்து என்ற பாடல்வழி எடுத்தியம்பப்படுகின்றது. மேலும் உடல் அழகுப்பெற்று வளர்ச்சியடைவதனையும் குறிப்பிடுகின்றது.

"திதலை அல்குல்

அகன்ற அல்குல்"

என்ற பாடல்கள் பெண்களின் அல்குலினை வர்ணிக்கின்றது (Nagarajan, 2004). இதுபோன்று "அலர்முலை ஆகத்து, அகன்ற அல்குல்" என்ற வரியானது பெண்ணின் மார்பினையும், அல்குலினையும் வர்ணிக்கின்றது. அல்குல் என்பதற்கு "பெண் குறியின் மேற்பக்கம்" என்று தமிழ்மொழி அகராதி விளக்குகிறது. பெண்களுக்கான 'இப்பகுதியானது கருப்பையினைக் கொண்டு குழந்தைப் பேற்றினைப் பெறுவதால் புனிதமானதாக மதிக்கப்பட்டு பூரணக்கும்பம் வழிபடுப் பொருளாகத் தோற்றம் பெறுகின்றன. இதனை கொழுத்தப் பருத்த இடை, விம்பி, வளர்ந்த மார்பகங்களுடைய நிர்வாணமான கர்ப்பிணிப் பெண்ணுடையது. இது கலைப்பொருளாக, இருந்திருக்க முடியாது, ஏனென்றால் இச்சிலை மீது செம்மண் பூசப்பட்டிருக்கிறது. எனவே இது ஒரு சடங்கோடு தொடர்பு உள்ளதாக இருந்திருக்க வேண்டும். இப்பெண் வளமைத் தேவதை ஆவாள். நிர்வாணமாக இருந்தாலும், மார்பகங்கள், வயிறு ஆகியவற்றிற்குத் தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது" என்ற பழங்கற்காலச் சிற்பங்களில் இடம்பெறும் வளமைக்குறியீடாக விளங்கும் பெண்களின் தன்மைகளை ஒப்புநோக்கும் பொழுது ஆதிகாலத்து மக்களின் சடங்கியலோடு இணைந்த வாழ்வியலைப் புரிந்துக்கொள்ள முடிகிறது. மானுடச் செழிப்பின் உயர்திணைப் பொருளான பெண் வளமைக்கான குறியீடாக விளங்குகின்றாள். ஆதிமனிதர்கள் வளமை வேண்டி செய்யப்படும் வேளாண் மற்றும் போர்த் தொழில்களுக்கான செயல்பாடுகளில் வளமைக் குறியீடாகப் பெண்ணை முதன்மைப்படுத்துகின்றனர். வளமைச்சடங்குக்கான பெண், தாய்த்தெய்வமாக உருபெற்று தாய்வழிச் சமூக அமைப்பினைத் தோற்றவிக்கின்றாள்.

## பெண் தெய்வம் தோற்றம்

நிலம், நீர், காற்று, மழை, மேகம், வானம், விண்கோள்கள், மரம், மலை போன்ற இயற்கைப் பொருள்களின் ஆற்றல் மற்றும் செயல்பாடுகள் மக்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்ததன் விளைவாகப் புனிதமெனக் கருதி மக்கள் வழிபடலாயினர். பெரும்பாலான இயற்கைப் பொருள்களைப் பெண்பாலாக எண்ணும் போக்குடையவர்கள் பழந்தமிழர்களாகும். இதற்குக் காரணமாக அமைவது வளமைக்கானப் பொருளாக பெண் விளக்கியமையாகும். அதுபோன்று மக்களுக்கானப் பொருளாதாரத்தினைப் வளப்படுத்தும் இயற்கைப் பொருள்கள் பெண்ணாகப் பார்க்கப்படுகின்றன

(Akilandeswari, 2021). மாமழை போன்ற நீர்வடிவிலான இயற்கைப் பொருட்களைப் பெண்ணாக சங்க இலக்கியமானது அடையாளப்படுத்துகின்றது. இதனை,

'நிறை சுனை உறையும் சூர் மகளிர்" (Nagarajan, 2004)

"சூருடை நனந் தலைச் சுனைநீர் மல்க" (Avvai Duraisamy, 2010)

இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன. கவிர மலையில் உள்ள சுனையில் சூர்மகள் என்னும் தெய்வம் வாழ்வதனை 'ஏர்மலர் நிறைசுனை உறையும் சூர்மகள்" என்னும் வரியும் வெறியாட்டின் பொழுது சூர்மகள் இசைக்கருவிகள் முழங்க ஆடும் இயல்புடையவர் என்று "பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்" என்னும் வரியும் முன்மொழிகின்றன (Avvai Duraisamy, 2010). இயற்கைப் பொருள்களில் சூர் என்னும் பெண்தெய்வம் வாழ்வதாகப் பழந்தமிழர் நம்பினர். இதுபோன்று அணங்கு என்னும் பெண்தெய்வமும் இயற்கைப் பொருட்களில் வாழ்வதாக நம்பப்படுகின்றது. சூர், அணங்கு என்னும் சொற்கள் பொதுநிலையிலும், பெண் தெய்வத்தினைக் குறிப்பதாகவும் சங்க இலக்கியம் சுட்டுகின்றது.

'பெருங் கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கே" (Avvai Duraisamy, 2010)

'உண்துறை அணங்கு................" (Nagarajan, 2004)

கடல், நீர் போன்ற இயற்கைப் பொருள்களில் அணங்கு என்னும் தெய்வம் இருப்பதாக கூறப்படுகின்றது. அணங்கு, சூர் என்னும் சொற்கள் பெண் தெய்வத்தையும் குறித்து நிற்கின்றன. இயற்கைப் பொருட்களைப் பெண்தெய்வமாகப் பார்க்கும் நிலைகளை இலக்கியத்தின் வழி அறியமுடிகின்றது. அணங்கு, சூர் என்பவை இயற்கைப் பொருள்களே அன்றி வேறு எந்தவொரு உருவ வழிபாட்டினையும் பேசவில்லை என்பதனை வலியூட்டும் விதமாக, இயற்கைப் பகுதிகளான மரங்கள், மலைச்சாரல்கள், மலை உச்சிகள், காடுகள், மலைச்சுனைகள், நீருற்றுகள், நீர்நிலைகள் ஆகியவற்றின் கடவுள், சூர், அணங்கு, சூலி, முருகு ஆகியவை தங்கி நடமாடின என்ற நம்பிக்கை வெகு ஆழமாக வேர் விட்டிருந்ததைப் பாடல்களின் வழியாகக் காணலாம்" என்று ராஜ்கௌதமனின் கருத்தினை நா. இளங்கோ எடுத்தாளுவதினால் உணரமுடிகின்றது.

அணங்கு, சூர் என்பது அச்சம், வருத்தம், தெய்வம் என்னும் பொருளினையும் தந்துநிற்பது குறிப்பிடத்தக்கதாகும். அணங்கு என்பது முருகன் என்னும் ஆண்கடவுளான தொல்கடவுள் வழிபாட்டுடனும் தொடர்புடையதாகும். தாய்த்தெய்வத்தின் தோற்றம் பற்றி, குறிஞ்சிநில வேட்டைச் சமூக வாழ்க்கையிலிருந்து கால்நடை வளர்ப்பு, வன்புலப் பயிர்த்தொழில் வாழ்க்கையாகிய முல்லைநில வாழ்க்கைக்குப் பழந்தமிழ்ச் சமூகம் மாற்றம் பெற்ற தருணத்தில்தான் தாய்வழிச் சமகம் உருவாயிற்று. இத்தகு தாய்த் தலைமைச் சமூகத்தில்தான் தாய்த் தெய்வ வணக்கம் தோன்றி நிலைபெற்றிருக்க வேண்டும். அக்காலக் கட்டத்துத் தாய்த்தெய்வம்தான் பெருங்காட்டுக் கொற்றி என்றழைக்கப்பட்ட கொற்றவை" என்ற கருத்தினை இளங்கோ எடுத்துரைக்கின்றார் இருந்த பொழுதினும் குறிஞ்சி நிலத்தினரின் வாழ்க்கையில் இடம்பெறும் அணங்கும், அணங்கினைப் பெண்ணாக, பெண் தெய்வமாக எண்ணும் போக்கும் சங்ககாலத்து முன்னோர் வாழ்விலே பெண்தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றமையினைப் பறைச்சாற்றுகிறது. குறிப்பிட்ட உருவின்றி இயற்கைப் பொருட்களின் ஆற்றலில் நன்மை விளைவிக்கும் ஆற்றலைத் தெய்வமாகவும் தீமை ஏற்படுத்தும் ஆற்றலினைப் பேயாகவும் உருவகித்தமையினை அணங்கு, சூர் என்னும் சொல்லாடல்கள் அறிவுறுத்துகின்றன. இதனைச் சார்ந்த நுட்பமான செயல்பாடுகளை நோக்கும்பொழுது பெண்தெய்வ தோற்றத்தினை அறியமுடிகின்றது. உருவ வழிபாட்டிற்கான தோற்றத்தினை விளக்கும் விதமாக சங்க இலக்கியங்களில் பாவை வழிபாடானது அமைகின்றது.

எருமையின் கோட்டினை நட்டு வழிபடும் வழக்கம் தொல்தமிழர் வாழ்வில் இடம்பெறுகிறது. குறிப்பாகப் பெண் எருமையின் கோட்டினை வழிபடும் இயல்பினராக முல்லை நிலத்தினர் காணப்படுகின்றனர்.

'தருமணல் தாழப்பெய்து இல் பூவல் ஊட்டி

எருமைப் பெடையொடு, எமர் ஈங்கு அயரும்" (Baktavatchala Bharathi, 2014)

வீட்டில் மணல் பரப்பி, செம்மண் பூசி பெண் எருமையின் கோடு நட்டு வழிபட்டு திருமணம் நடத்தும் வழக்கத்தினராய் முல்லைநிலம் வாழ் மக்கள் விளங்குகின்றனர். எருமைக்கோடு வழிபாடானது முல்லைநில சமூகத்தினருக்கான குலக்குறியீடாகக் காணப்படுவதை அறியமுடிகின்றது. எருமைக்கோடு வலிமையானதாக வளம் தரும் பொருளாகக் கருதப்பட்டதன் விளைவே இதுபோன்ற செயல்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. பால், தயிர், போன்ற உணவு தேவைகளைப் பூர்த்தி செய்து வலிமையானதாகப் பெண் எருமை விளங்கியதால் செழிப்பு மந்திரச் செயலாக பெண் எருமைக் கோடு வழிபாடு காணப்படுகிறது. இதுபோன்று மாடு என்னும் பொருள் செல்வம் தரும் பொருளாக விளங்குவதனையும் அத்தகைய செவ்வங்களைப் பெற்று நாட்டினை வளமாக்கி கொள்ள ஆநிரைப் போர் நடைபெற்றதனையும் கொண்டு விளங்கி கொள்ள இயலும். ஒரு நாட்டின் வளர்ச்சியை அழிக்க நினைப்பவர் வளமைக்குக் காரணமாக இருக்கக்கூடிய பொருளினை அழிக்கின்றனர். இதனால் ஆநிரைக் கவர்தல், மீட்டலுக்குமான போர் நிகழ்கின்றது. மானுட வாழ்வின் வளமைக்கான பொருளே குலக்குறியீடாக இருப்பது கொண்டு ஒவ்வொரு சமூகச் சூழல்களையும் புரிந்துகொள்ள இயலும்.

## முடிவுரை

பூப்பெய்திய பெண் தூய்மையின் பொருட்டு வீட்டில் உள்ள கலன்களைத் தொடாமல் விலகி இருக்கின்றாள். தழையாடையை உடுத்தி வாழ்ந்து வந்த பழங்காலத்தினர் இன்றைய ஆடை பயன்பாடு இல்லாத சூழலில் இதுபோன்ற கட்டுப்பாட்டினை வளர்த்துக்கொண்டனர். பிறகு புனிதப் பொருள்களையும் தொடாமல் விலகும் நிலைமையை உண்டுபண்ணுகிறது. புனிற்று மகளிருக்கான நெய்யாட்டுச் சடங்கில் மங்கல மகளிர் முன்னிறுத்தப் பெறுதல், வளமைச் செயல்பாடாகும். இத்துடன் அகிற்புகைத்தல், வேப்பிலை சொருகுதல், இசை எழுப்புதல் என்னும் பாதுகாப்பிற்கான மந்திரச் சடங்குகளையும் பின்பற்றுகின்றனர். இனப்பெருக்கத்திற்குக் காரணமான பெண்ணும் பெண்ணின் உறுப்புகளும் வளமைப் பொருளாகக் காணப்படுகின்றன. கரு பையினை அடியொற்றித் தோன்றிய கும்ப வழிபாடு, பெண்குறி வழிபாடு போன்றவை இனவிருத்தி என்னும் பொருளியல் தேவையை நிறைவு செய்ததற்காகத் தோன்றியதும் செழிப்பு மந்திரமும் ஆகும். வேட்டைச் சமூகத்திலும் பெண் எருமைக்கோடு வழிபடு பொருளாக விளங்குகின்றன. இவற்றில் இருந்தே தாய்த்தெய்வ வழிபாடு என்னும் தெய்வம் சார்ந்த நிகழ்வுகள் வளத்தெடுக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கட்டத்தில் மந்திரச் செயல்பாடாக இருந்த நிகழ்வுகள் எல்லாம் இவ்வாறே சமயம் சார்ந்த நிகழ்வாக மாற்றம் பெற்றுள்ளன என்பது கருதத்தக்கதாகும்.

## References


Akilandeswari, N., (2021) Small deity worship in Tamil culture, International Research Journal of Tamil, 3(S-1), 109-113. https://doi.org/10.34256/irjt21s117

Avvai Duraisamy pillai, S., (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Baktavatchala Bharathi, (2005) manudaviyal kotpadugal, Adaiyalam Publications, Chennai, India.

Baktavatchala Bharathi, (2014) Ilakkiya Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Balasubramanian, K.V., (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Devaneya Pavanar, (2017) Pandai Tamil Nagarikamum Panpaadum, Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Gandhi, K., (1980) Tamilar Palakavalangalum Nambikaikalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Maruthithasan, (2005) Narmadhavin Tamil Agarathi, Narmadha Pathipagam, Chennai, India.

Nagarajan, V., (2004) Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Veeramamunivar, (2005) Sathuragarathi, Sandhya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License